பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 12 | ஞாயிற்றுக்கிழமை | 29.10.2023 | அதிர்வு 89

## ஆற்றிலிருந்து ஆணின் சடலம்

அடையாளம் காணப்படாத ஒருவரின் சடலம் மொரட்டுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொரட்டுவை பீரிஸ் மாவத்தை பகுதியில் உள்ள பொல்கொட ஆற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

05

# பொதுஜன பெரமுனவில் களையெடுப்பு ஆரம்பம்

### கட்சியின் கொள்கைக்கு மாறாகச் செயற்படும் எம்.பிக்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை என்று பஸில் பகிரங்க எச்சரிக்கை



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அக்கட்சி தீர்மானித்துள்ளது.

அவர்கள் தொடர்பில் கடுமையான தீர்மானம் எடுக்கப்படும் என்றும், தற்போது சுயேச்சையாகச் செயற்படும் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவது ஏற்புடையதல்ல என்றும் அக்கட்சியின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

05

### ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கோரி

## மீண்டும் ஜெனிவா சென்றார் பேராயர்



2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் தொடர்பில்

05

## இந்திய மீனவர்களின் விடுதலை பற்றி பேச்சு



இந்திய லோக் சபா தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி தலைமையிலானகுழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

அவர்கள் இன்று கொழும்பில் நடைபெறவுள்ள அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் சம்மேளனத்தின் 50ஆவது பொன்விழாவில் கலந்து கொள்வதற்காக

05

## புதிய பயணத்தை ஆரம்பிக்கத் தயார்

### தயாசிறி அதிரடி அறிவிப்பு



புதிய அரசியல் பயணத்தை ஆரம்பிக்கத் தான் தயார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து அண்மையில் நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.


05



சுமார் நாற்பது, ஐம்பது வருடத்திற்கு முந்திய ஒரு தகவலுடன் இன்றைய பத்தியை ஆரம்பிக்கிறேன்.

அந்த காலத்தில் பொழுதுபோக்கு என்றால் பிரதானமானது சினிமாதான். தியேட்டரில் போய்ப் பார்க்க வேண்டும். புதிய – வரவேற்புப் பெற்ற – படங்கள் ரிலீஸ் ஆகி, படப்பெட்டி வந்தால்தான் தியேட்டர்களுக்கு கொண்டாட்டம். ஊர்ப் பக்கங்களில் உள்ள ஓரிரண்டு தியேட்டர்களுக்கு

06



# டனிஸ் அலி பிணையில் விடுதலை



கொழும்பில் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட சமூகச் செயற்பாட்டாளர் டனிஸ் அலி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

டனிஸ் அலி மீதான வழக்கு அடுத்த மாதம் 10 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, எதிர்ப்பு நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட மருத்துவ பீட மாணவ செயற்பாட்டாளர் குழுவின் ஏற்பாட்டாளர் நவீன் தாரக்க உள்ளிட்ட இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கல்வியை தனியார்மயப்படுத்துவதற்கு எதிராக கொழும்பு புதிய நகர மண்டபத்திற்கு அருகில் நேற்று பிற்பகல் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

புதுக்கடை 07 ஆம் இலக்க நீதிமன்றத்தினால், தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணைகளில் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# கொழும்பு துறைமுக நகரில் சுங்கத்தீர்வையற்ற வர்த்தகம்

## வர்த்தமானி வெளியானது

கொழும்பு துறைமுக நகரில் சுங்கத் தீர்வையற்ற சில்லறை வர்த்தக நிலையங்கள் அல்லது சுங்கத்தீர்வையற்ற வர்த்தக நிலையத் தொகுதிகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான தகைமைகள் தொடர்பில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் எனும் அடிப்படையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, சுங்கத்தீர்வையற்ற சில்லறை வர்த்தக நிலையங்களை நடத்திச்செல்வதற்கு முதலீட்டாளரினால் குறைந்தபட்சம் 05 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட வேண்டும்.

இந்த முதலீட்டாளருக்கு சுங்கத்தீர்வையற்ற வர்த்தகம் தொடர்பில் சர்வதேச ரீதியிலான அனுபவம் காணப்பட வேண்டும் எனவும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சுங்கத்தீர்வையற்ற வர்த்தக நிலையத் தொகுதிகளை நடத்திச் செல்வதற்கு முதலீட்டாளரினால் குறைந்தபட்சம் 7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட வேண்டும் என வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருகோணமலை துறைமுகத்திற்கு ஜப்பான் நாசகாரிக் கப்பல் வருகை

ஜப்பான் கடல் தன்னியக்க பாதுகாப்பு படைக்கு சொந்தமான Akebono DD 108 எனும் கப்பல் திருகோணமலை துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது.

கடற்படையின் சம்பிரதாயங்களுக்கு அமைய, இலங்கை கடற்படையினரால் இந்தக் கப்பல் வரவேற்கப்பட்டது.

நாடகாரி வகையை சேர்ந்த இந்த கப்பல் 150 மீட்டர் நீளம் கொண்டது. இந்த கப்பலில் 172 பணியாளர்கள் உள்ளனர்.

Akebono DD 108 கப்பல் நாட்டில் நங்கூரமிட்டிருக்கும் காலப்பகுதியில் இருநாட்டு கடற்படையினருக்கும் இடையில் நட்புறவை மேம்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளது.

இந்த கப்பல் இலங்கை கடற்படைக் கப்பலுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபடவுள்ளது எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



இந்த கப்பல் நாளை மறுதினம் 31 ஆம் திகதி நாட்டில் இருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது.



CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

## 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES




## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™
GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

## Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk

# சீனக் கப்பல் மேலும் இரண்டு நாள்களுக்கு இலங்கை கடலில் ஆய்வில் ஈடுபட அனுமதி



கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள ஷி யான் 6 சீன ஆய்வுக் கப்பலுக்கு நாட்டின் கடற்பரப்பில் மேலும் இரு தினங்களுக்கு ஆய்வில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று புறப்படவிருந்த இந்த கப்பல் எதிர் வரும் 31ஆம் திகதி வரை நாட்டில் தரித்து நிற்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலின் பணிக்குழாமுடன் இணைந்து ஆய்வு நடவடிக் கைகளில் ஈடுபடுவதற்கு நாரா நிறுவனத்திற்கும் ருஹுணு பல்கலைக்கழகத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

"ஷி யான் 6" சீன ஆய்வுக் கப்பலின் இலங்கைக்கான பயணம் தொடர்பில் இந்தியா வெளிப்படுத்தியுள்ள தீவிர கரிசனையின் அடிப்படையில் இந்த விடயம் முக்கியத்து வமிக்கதாகக் கருதப்படுகிறது.

எனினும், சீன ஆராய்ச்சிக் கப்பல் திட்டமிடப்பட்டவாறு கொழும்பு துறைமுகத்தை கடந்த வியாழக்கிழமை வந்த டைந்தது.

கொழும்பு துறைமுகத்தின் SAGT முனையத்தில் இந்த கப்பல் நங்கூரமிட்டுள்ளது.

இந்த கப்பலில் கடலின் அடிப்பகுதியை கண்காணிக்கக்கூடிய உயர் தொழில்நுட்பக் கருவிகள் உள்ளிட்ட பல்வேறு உபகர ணங்கள் காணப்படுகின்றன. சேகரிக்கப்படும் மாதிரிகளை இந்த கப்பலிலேயே காணப்படும் ஆய்வுக்கூடத்தில் பரி சோதனைக்குட்படுத்தும் வசதிகளும் உள்ளன.

260 தொன் எடை கொண்ட ஆய்வுக்கருவிகள் இந்த கப்பலில் காணப்படுவதுடன், 60 பேருக்கான வசதிகள் உள்ளன.

# மாணிக்கவாசகம் நினைவாக 'மாணிக்கம் விருது' அறிமுகம்

## இம்முறை தினசேன ரத்துகமகேக்கு!









இலங்கையின் சிரேஷ்ட ஊடகவிய லாளராகப் பணியாற்றி மறைந்த பொன் னையா மாணிக்கவாசகம் நினைவாக "மாணிக்கம் விருது" அறிமுகப்படுத் தப்பட்டு சிரேஷ்ட ஊடகவியலாளர் தின சேன ரத்துகமகேக்கு அது இம்முறை வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இந்த நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

வவுனியா ஊடக அமையத்தின் ஆலோசகராகவும், அதன் உருவாக்கத் திற்கு காரணமாகவும் இருந்த இலங் கையின் சிரேஷ்ட ஊடகவியலாளா ரான பொன்னையா மாணிக்கவாசகம் சுகவீனம் காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் அமரத்துவம் அடைந்திருந் தார்.

அவரது நினைவாக வவுனியா ஊடக அமையமானது மாணிக்கம் விருதினை அறிமுகம் செய்து வழங்கி வைத்துள்ளது. இலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளர், பி.பி.சி. சிங்கள சேவை ஊடாக மக்கள் மத்தியில் நன் மதிப்பைப் பெற்றமையுடன், மறைந்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக் கவாசகத்துடன் இணைந்து தமிழ் மக்களது பிரச்சினைகளைப் போர் காலத்திலும், போருக்குப் பின்னரும் சிங்கள, ஆங்கில மொழி ஊடகங்கள் மூலம் உலகறியச் செய்து இன்று வரை ஊடகவியலாளராகப் பணியாற்றி வரு வதை பாராட்டி வவுனியாவைச் சேர்ந்த தினசேன ரத்துகமகேக்கு இந்த விருது வழங்கி வைக்கப்பட்டது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்ஸ ன், மொனராகலை ஊடகவியலாளர்கள் மற்றும் பிரதீபா ஊடக வலையமைப்பு, திருகோணமலை ஊடகவியலாளர்கள், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஊடகவியலாளர்களின் சங்கமத்தோடு இடம்பெற்ற நிகழ்வில் சிரேஷ்ட ஊடக வியலாளர் தினசேன ரத்துகம கேக்கு மறைந்த சிரேஷ்ட ஊடகவிய லாளர் பொன்னையா மாணிக்கவாச கத்தின் துணைவியார் மற்றும் யுஎஸ் சைட் நிறுவனத்தின் ஸ்கோர் வேலைத் திட்டத்தின் இலங்கைக்கான வதி விடப் பிரதிநிதி ஜெ.கார்த்திகேயன் ஆகி யோர் இணைந்து வழங்கி வைத்த னர்.

## ஆற்றிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தவர் யார் என்பது தொடர்பில் இதுவரை உறுதியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கும் பொலிஸார், சடலம் குறித்த விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், உயிரிழந்தவர் சுமார் 5 அடி உயரமும் மெல்லிய உடல்வாகும் கொண்டவர் என்றும், கறுப்பு நிற காற்சட்டையும் பழுப்பு நிற ரி – சேர்ட்டும் அணிந்துள்ளார் என்றும், அவரது முழங்கையோடு வலது கை துண்டிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான நீதிவான் விசாரணைகளின் பின்னர், களுபோவில வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## மீண்டும் ஜெனிவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிப்படையான விசாரணைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிக்குமாறு கத்தோலிக்க திருச்சபை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் பிரதி உயர்ஸ்தானிகருக்கும் இடையில் ஜெனிவாவில் முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போதே பேராயர் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் ரணில் – ராஜபக்ஷ அரசிடம் நீதிக்காக பல முறைகள் கோரிக்கை விடுத்தும் அலட்சியம் காட்டியமையால் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டைக் கோருவதாகப் பேராயர் இந்தச் சந்திப்பின்போது தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் வெளிநாட்டவர்கள் 45 பேர் உள்ளடங்கலாக 269 பேர் உயிரிழந்தனர்.

இந்தநிலையில், உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 ஊடகம் ஆவணப்படமொன்றை அண்மையில் வெளியிட்டது.

தொடர்ந்து இந்த விடயம் தொடர்பில் பல்வேறு தரப்பினால் சர்வதேச விசாரணை கோரப்பட்டது.

இதனிடையே, உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் உள்ளிட்ட எந்தவொரு விடயம் தொடர்பிலும் இலங்கை அரசு சர்வதேச விசாரணையை மேற்கொள்ளாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

+ ஜனாதிபதித் தேர்தல்
+ நாடாளுமன்றத் தேர்தல்

# இரு தேர்தல்களையும் ஒத்திவைக்க முடியாது

## டியூ குணசேகர கூறுகின்றார்



ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன எனத் தகவல்கள் வெளியாகும் நிலையில், இவ்விரு தேர்தல்களையும் ஒத்திவைக்க முடியாது என்று இலங்கை கம்யூனிஸ் கட்சி தலைவரான டியூ குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

“நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு அரசமைப்பில் இடமுள்ளது. ஆனால், அதனை ஒத்திவைப்பதற்கு இடமில்லை. அதேபோல் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கும் அரசமைப்பில் இடமில்லை. ஆளுந்தரப்பு உயர்நீதிமன்றத்தை நாடினால்கூட அதற்கான வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்றே நம்புகின்றேன்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் அரசமைப்புக்கு அப்பால் சென்று, சிற்சில சட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தி ஒத்திவைக்கப்பட்டன. இதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. ஆனால், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலை பிற்போட நிறைவேற்று அதிகாரத்துக்கு அதிகாரம் இல்லை.” – என்றார்.

## பொதுஜன பெரமுன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இருபுறமும் கால்களை வைத்திருப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளவர்களை நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் முக்கிய உறுப்பினர்கள் பசில் ராஜபக்ஷவிடம் விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## புதிய பயணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், நாட்டுக்குப் புதிய அரசியல் இயக்கமொன்றின் தேவை எழுந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், அரசியலில் எந்த ஏமாற்றமும் தனக்கு இல்லை என்றும், தான் சில பிரச்சினைகளை மாத்திரம் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில், தனது போராட்டம் கைவிடப்படவில்லை என்றும், தான் இன்னும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலே இருக்கின்றார் என்றும் தயாசிறி எம்.பி. தெரிவித்தார்.

சில கட்சிகள் தன்னுடன் பேச்சில் ஈடுபட்ட போதும் தான் அந்தக் கட்சிகளில் எதிலும் இணைவதற்குத் தயார் இல்லை என்றும், புதிய எதிர்பார்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## இந்திய மீனவர்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று கொழும்புக்கு வருகை தந்தனர்.

நேற்று கொழும்பு வந்த இந்தியப் பிரநிதிகள், இலங்கை வெளிநாட்டு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியைச் சந்தித்தனர்.

இதன்போது, அண்மையில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 27 தமிழ் நாட்டு மீனவர்களை விடுதலை செய்யுமாறு இந்திய லோக் சபா தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இவர்களது விடுதலை சம்பந்தமாக உரிய அதிகாரிகள் ஊடக சட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அலி சப்ரி உறுதியளித்தார்.

இரண்டு நாடுகளும் இணைந்து இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வைப் பெற வேண்டும் என்றும் நவாஸ்கனி இதன்போது வலியுறுத்தினார்.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல சமயங்களில் புதுக் கொப்பிகள் கிடைப்பதில்லை. அதனால் ரசிகர்களைத் திரட்ட ஊர்ப் பக்கத் தியேட்டர்கள் ஒரு தந்திரம் பண்ணும். அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆர். ரசிகர்கள், சிவாஜி ரசிகர்கள் என்று ஆதரவாளர்கள் பட்டாளம் கன்னை பிரிந்து நிற்கும். அதை வசமாகப் பயன்படுத்துவதுதான் ஊர் தியேட்டர்களில் தந்திரம். அடுத்த ஒரு கிழமைக்கு 'எம்.ஜி.ஆர். கதம்பம்' என்று அறிவிப்பு வரும். அடுத்த ஒரு பத்து நாளைக்கு 'சிவாஜி கதம்பம்- புது செட்' என்று அறிவித்தல் ஒட்டப்படும். ரசிகர்கள் கூட்டம் ஓகோ என்று திரளும்.

அது என்ன கதம்பம் என்று கேட்கிறீர்களா? பல சுவையான விடயங்கள் சேர்வதுதானே கதம்பம்! பல படங்களிலும் உள்ள எம்.ஜி.ஆரின் முக்கிய காட்சிகளைக் கோர்த்து ஓர் இரண்டு மணி நேரம் ஓட விட்டால் அது 'எம்.ஜி.ஆர். கதம்பம்'. வழமையான படத்துக்குத் திரள்வதை விட இந்தக் கதம்பங்களுக்கு ரசிகர் கூட்டம் அதிகம் திரளும் என்பார் மூதூர் பக்கத்தில் ஒரு தியேட்டருக்கு மனேஜராக இருந்த வயோதிபர் ஒருவர். அவர் என் நண்பரின் தந்தை. தியேட்டரில் இருக்கும் பழைய கொப்பிகளில் நான்கு துண்டுகளை எடுத்துச் சேர்த்து விட்டால் கூட்டம் ஜமாய்க்கும் என்பார் அவர்.

அதுபோல இன்று நானும் 'அசோட்டட்' தகவல்கள் சிலவற்றை பொறுக்கி கதம்பமாக – ஆரமாக – தருகிறேன்.

\+ + +

முதல் செய்தி கொழும்பு – யாழ்ப்பாணம் ரயில் சேவையின் சீத்துவம் பற்றியது. வார இறுதிச் சேவையை விசேடமாக வழங்கவென கொழும்பு – காங்கேசன் இடையில் 'யாழ் நிலா' என்ற பெயரில் ஒரு ரயில் சேவையைத் திணைக்களம் ஆரம்பித்தது. ஒருவருக்கு கட்டணம் ரூ.4,000/-. வெள்ளி இரவு 10 மணிக்கு கல்கிஸையில் இருந்து புறப்படும் ரயில் காலையில் காங்கேசனுக்கு வந்து சேரும். அதுபோல ஞாயிறு மாலை 9.30 மணிக்கு காங்கேசனில் இருந்து புறப்பட்டு திங்கள் காலை கல்கிஸை வரைப் பயணிக்கும்.

கடந்தவெள்ளியன்று–அதாவதுநேற்று முன்தினம் – இரவு 10 மணிக்கு அந்த ரயிலைப் பிடிக்கவென்று ஆசனம் பதிவு செய்து வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு வந்திருந்தார் யாழ் மாவட்ட எம்.பியான சுமந்திரன். ரயிலின் என்ஜினில் ஏதோ திருத்தம், இதோ வரும், அதோ வரும் என்று கூறியமையினால் ரயில் நிலையத்தில் காத்து கிடந்தார் அவர். சுமார் மூன்றரை மணி நேர தவத்தின் பின்னர் ஒருவாறு அதிகாலை 1.30 மணிக்கு ரயில் வந்தது. புறப்பட்ட ரயில் நீண்ட இழுபறிக்கு பின்னர் காலை 7.30 மணி அளவில் வவுனியாவுக்குச் சற்று தொலைவில் செயலிழந்தது. பின்னர் காலை 8:30 மணிக்கு ஒருவாறு வவுனியா ரயில் நிலையம் வரை நகர்ந்தது அது. அத்தோடு சேவை தடைப்பட்டதாக அறிவிக்கப்பட்டது . வேறுவழியின்றிவாகனம்ஒன்றைஒழுங்கு பண்ணி வவுனியா நகருக்குப் போய், அங்கிருந்து இன்னொரு வாகனத்தில் யாழ் பயணமானர் எம்.பி.

வவுனியாவில் காத்துக் கிடந்த ஏனைய பயணிகள், காலை 5 மணிக்கு கல்கிஸையில் இருந்து புறப்படும் கடுகடு குளிரூட்டி ரயில் வவுனியாவுக்கு முற்பகல் 11.30 மணிக்கு வந்து சேர்ந்ததும், அதில் தொற்றிக்கொண்டு பிற்பகல் 2 மணி அளவில் யாழ்ப்பாணம் வந்தடைந்தனர். ஆக, 16 மணி நேர அவலப் பயணம்.

இதற்கிடையில் ரயில்வே பொது முகாமையாளர் குணசேகரவுடன் தொடர்பு கொண்டு பயணிகள் அவலத்தை எடுத்துரைத்தார் சுமந்திரன். ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மன்னிப்பு கேட்ட அந்த அதிகாரி, அன்றைய பயணிகள் அனைவருக்கும் அவர்களது டிக்கெட் பணம் 4 ஆயிரம் ரூபா திரும்ப வழங்கப்படும் என்று உறுதி அளித்தார்.

பயணிகளுக்கு இத்தகவல். விடயத்தைக் கவனித்து, ரயில் நிலையத்துடன் தொடர்பு கொண்டு, பணத்தை மீளப் பெற்றுக் கொள்வது நல்லது.

\+ + +

அடுத்த பட்ஜெட் வரும் 13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படுகின்றது. அன்று நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் பெரும் ஆர்ப்பாட்டத்தை ஒன்று கூடி முன்னெடுக்க தொழிற் சங்கங்கள் தயாராகி வருகின்றன. தற்போதைய விலைவாசி உயர்வை ஒட்டி, சம்பள அதிகரிப்பும் 20 ஆயிரம் ரூபா அலவன்ஸும் வழங்கக் கோரித்தான் இந்தப் போராட்டம். 2016 இற்குப் பின்னர் கடந்த ஏழு ஆண்டுகளாக சம்பள உயர்வே வழங்கப்படவில்லை. விலைவாசிதான் எகிறிக் கொண்டு செல்கின்றது என்பது தொழிற்சங்கங்களின் வாதம். அதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

\+ + +

யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சி பார்ப்பதற்காக தனிப்பட்ட விஜயமாக வந்த ஒரு முக்கிய அமைச்சரின் V8 ரகக் கார் யாழ்ப்பாணத்தில் கடந்த 21ஆம் திகதி மிக மோசமான விபத்தில் சிக்கி, மீளத் திருத்தி எடுக்க முடியாத அளவுக்கு நாசமாகிவிட்டது.

நிகழ்ச்சி முடிந்து அன்றைய இரவே தான் கொழும்பு திரும்புவார் எனப் பாதுகாப்புத் தரப்புக்கு அமைச்சர் முதலில் அறிவித்த போதிலும், பின்னர் மனதை மாற்றிக்கொண்டு ஓரிரு தினங்கள் யாழ்ப்பாணத்தில் ஹோட்டல் ஒன்றில்



அவர் தங்கி இருந்தார். அந்த சமயத்தில் வெளியே சென்ற கார் மோசமான ஒரு விபத்தில் லொறியொன்றுக்கும் சுவர் ஒன்றுக்கும் இடையில் சிக்கி நசிந்து நாசமடைந்துவிட்டது.

அரச சொத்தான அந்த V8 ரகக் காரின் பெறுமதி 6 கோடி ரூபாவுக்கு அதிகம். இப்போது மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் காயலான் கடைக்குத்தான் அதை அனுப்ப வேண்டும்.

\+ + +

பெரும் நட்டத்தில் இயங்கும் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் விற்பனைக்கு வருகிறது. அதன் பங்குகளை வாங்கும் தரப்பு அதை இனி நிர்வகிக்க முடியும். அந்த நிறுவனம் எந்த அமைச்சருக்கு கீழ் வருகின்றது தெரியுமா? அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சிவாவின் கீழ். அவரின் யோக்கியதை பற்றித்தன் எல்லோருக்கும் நன்கு தெரியுமே! தன் காட்டில் மீண்டும் ஒரு மழை என இந்தப் பங்கு விற்பனைச் சந்தர்ப்பத்தை அவர் ஆவலோடு பார்த்திருப்பார் என்று நம்பலாம்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பேரின பரவணிப் பண்பியல்பு

இலங்கையில்சட்டத்தின்ஆட்சிஎன்பதுகேலிக்குரியதாகத்தான் இருக்கின்றது. நீதி, நியாயம் என்பன கிலோ என்ன விலை என்று கேட்கும் நிலைமைதான் நீடிக்கின்றது.

நீதித்துறை தொடர்பில் முக்கிய வாசகம் ஒன்று உண்டு. நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமல்ல, நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும் என்பதுதான் அது.

நாட்டில் நீதி நிலை நிறுத்தப்படுகிறது, சட்டத்தின் ஆட்சி நிலவுகின்றது என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட வேண்டுமானால், நீதி நிலைநாட்டப்படுவது மக்களுக்கு உணர்த்தப்படவும் வேண்டும்.

ஆனால் இங்கு - நமது நாட்டில் - நீதி நிலைநாட்டப்படுவதும் இல்லை நிலநாட்டப்படுவதாகக் காட்டப்படுவதுமில்லை. வெளிப்படையாக அநீதி நீடிப்பது புலப்பட அனுமதிக்கப்படுகிறது.

அதற்கு நல்ல உதாரணம் மட்டக்களப்பு மங்களராம விஹாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்தின தேரர் விடயத்தில் இலங்கையின் பொலிஸ்துறை நடந்து கொள்ளும் மெத்தனப் போக்காகும்.

இனங்களுக்கு இடையில் பகையுணர்வையும், முரண்பாட்டையும், விரோதத்தையும் ஏற்படுத்தும் விதத்தில் தாம் சார்ந்த பேரினவாத வெறித் தரப்பில் நின்றபடி, சிறுபான்மையினரான தமிழர்களைக் கொல்லுவேன், வெட்டிச் சாய்ப்பேன் என்றெல்லாம் அவர் கொதித்தெழுந்து, சத்தமிட்டு, வெறிப்பேச்சு அடாவடித்தனம் பண்ணியமை சமூக ஊடகங்களில் விரிவான ஆதாரங்களுடன் அம்பலமாகி உள்ளது.

இத்தகைய செயல்பாடுகள் - நிந்தனை நடவடிக்கைகள் - தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பட்டயம் கூறுகின்றது. அந்தப் பட்டயத்தை ஏற்று, அங்கீகரித்துள்ள இலங்கை, அதில் உள்ள அம்சங்களைத் தனது நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்காக, 2007 இல் அதற்கான சட்டங்களை நாடாளுமன்றத்தில் அங்கீகரித்துள்ளது.

அதன் பிரகாரம் இத்தகைய இன வெறியூட்டும் மோசமான பேச்சுக்கள் மற்றும் நடத்தைகளைப் பகிரங்க வெளியில் வெளிப்படுத்துவோர் பிணையில் வெளியே வர முடியாத கைது நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஆனால் சுமண தேரர் அந்த இனவெறியூட்டும் மோசமான அடாவடிப் பேச்சை பகிரங்க வெளியில் ஆற்றி, மூன்று நாள்கள் கடந்துவிட்டன.

பொலிஸ் தலைமையகத்திலும், ஏறாவூர் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டு விட்டன. ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. நேரடியாக பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாட்டு கடிதம்அனுப்பியும்விட்டார். மனோகணேசன் எம்.பி. உட்பட பல முக்கிய அரசியல்வாதிகள் அரசிடம் முறையிட்டும் விட்டனர்.

ஆனால் இதுவரை சுமண தேரருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. அவர் நாடியைத் தடவி, காலில் விழாத குறையாக கெஞ்சி, அவரைத் தாஜா செய்து, சமாளிக்கும் வேலையைத்தான் பொலிஸ் தரப்பு செய்து கொண்டிருக்கின்றது .

அவர்கள் பௌத்த பேரினவாதிகள். பேரினவாதப் போக்கு அரசு, அவர்கள் விடயத்தில் அப்படித்தான் - நீதியை - நியாயத்தை - கவனத்தில் எடுக்காமல்தான் நடக்கும். அதுவே சிங்கள - பௌத்த பேரினவாத பரவணிப் பண்பியல்பு. அது நாய் வால். நிமிர்த்த முடியாதது.

### இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள

# ஜேர்மனிக்குச் சஜித் அழைப்பு







எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இலங்கைக்கான ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறையின் பிரதம பிரதிநிதி திருமதி மேரி அன்டோனியா வொன் ஷொன்பெர்னுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கைக்கான ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதிநிதிகளின் கூட்டாண்மை விவகாரங்கள்ஃஏற்றுமதி ஊக்குவிப்பு பிரதானி மலிந்த கஜநாயக்க மற்றும் தொடர்பாடல் முகாமையாளர் திருமதி கேஷலா டயஸ் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தடைகளை நீக்கி மற்றும் இருதரப்பு வர்த்தகத்தை ஊக்குவிப்பதன் மூலம் அந்நிய நேரடி முதலீட்டு நடவடிக்கைகளில் சிறப்பு கவனம் செலுத்தி, ஜேர்மன் வர்த்தக நிறுவனங்கள் இலங்கையில் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சாதகமான சூழலை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தி இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

### நிமல் லான்சாவுடன் விவாதத்துக்கு சென்றால்

# நாமல் நிச்சயம் தோற்பார்!

### சனத் நிஷாந்த பரபரப்பு கருத்து



நிமல் லான்சா எம்.பியின் சவாலை ஏற்று அவருடன் விவாதத்துக்குச் சென்றால் நாமல் ராஜபக்ஷ எம்.பி. நிச்சயம் தோல்வியடைவார் என்று நாமலின் சகாவும் இராஜாங்க அமைச்சருமான சனத் நிஷாந்த தெரிவித்தார். அதற்கான காரணத்தையும் அவர் விவரித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விமர்சிப்பதை விடுத்து, முதுகெலும்பிருந்தால் வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து எதிரணியில் அமருமாறு நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட மொட்டு அணியினருக்கு நிமல் லான்சா சவால் விடுத்திருந்தார். அத்துடன், நாமல் ராஜபக்ஷவை பகிரங்க விவாதத்துக்கும் அவர் அழைத்திருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சனத் நிஷாந்த,

“நிமல் லான்சாவின் சவாலை ஏற்று நாமல் ராஜபக்ஷ விவாதத்துக்குச் செல்வார் என நான் நம்பவில்லை. அவ்வாறு சென்றால் நாமல் ராஜபக்ஷ தோல்வி அடைவது உறுதி. நிமல் லான்சா என்பவர் ஹெரோயின், கஞ்சா, குடு பற்றியே பேசுவார். அவை பற்றிதான் அவருக்கு நன்கு தெரியும். ஆனால், நாமல் ராஜபக்ஷவுக்கு விளையாட்டு, தொழில்நுட்பம் உள்ளிட்ட விடயங்கள் பற்றியே தெரியும். அவருக்குப் போதைப்பொருட்கள் பற்றி தெரியாது. ஆகவே தான் விவாதத்துக்குச் சென்றால் நாமல் தோல்வியடைவார் என்று கூறுகின்றேன்.” – என்றார்.

# தி.மு.க. ஆட்சியில் தமிழகம் அழிவுப்பாதையில் உள்ளது!

## – பழனிசாமி கவலை

விவசாயம், நெசவுத் தொழில் தி.மு..க ஆட்சியில் அழிந்து வருகிறது. ஒட்டு மொத்த தமிழகமும் அழிவுப்பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி விமர்சித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம் காங்கயம் பேருந்து நிலைய பகுதியில் 52 அடி உயர கம்பத்தில் கட்சிக்கொடியை ஏற்றி வைத்தபின் அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதல் வருமான பழனிசாமி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,




தி.மு.க. அரசு, பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன. இந்த பகுதியில் நெசவு, வேளாண் தொழில் அதிகம் உள்ளது. ஆனால் இந்த தொழில் செய்பவர்கள், தி.மு.க. அரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொப்பரைக்கு அ.தி.மு.க. ஆட்சியில் விலை உயர்த்தி தரப்பட்டது. ஆனால் தி.முக. அவர்களை கண்டுகொள்ளவில்லை.

அதேபோல் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் மும்முனை மின்சாரம் கொடுக்கப்பட்டு வேளாண் துறை சிறப்பாக இருந்தது. தி.மு.க. அரசு விவசாயிகளுக்கு 2 லட்சம் நீர் இறைக்கும் இயந்திரங்களை கொடுத்துள்ளோம் என்று சொல்கிறார்கள். ஆனால் எப்போது மின்சாரம் வரும், வராது என தெரியாமல் விவசாயிகள் அவதியுறுகின்றனர். அந்தளவுக்கு மின் தடை உள்ளது.

அதேபோல் நெசவாளர்களுக்கு, துணிக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. இதனால் கைத்தறி, விசைத்தறி தொழில் புரிபவர்கள் நலிவடைந்து தறிகளை எடைக்கு போடும் நிலை ஏற்பட்டுள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் நெசவாளர்கள், விவசாயிகள் மகிழ்ச்சியாக இருந்தனர். ஆனால், விவசாயம், நெசவுத் தொழில் திமுக ஆட்சியில் அழிந்து வருகிறது.

ஒட்டு மொத்த தமிழகமும் அழிவுப்பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

இந்த நிலை மாற நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு உங்கள் ஆதரவை தர வேண்டும். அ.தி.மு.க. நிறுத்தும் வேட்பாளரை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# மாலைதீவு கடற்படையினரால் தூத்துக்குடி மீனவர்கள் கைது



மாலைதீவு கடற்படையினரால் தூத்துக்குடி மீனவர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தூத்துக்குடி, மதுரையைச் சேர்ந்த 12 பேர் கடந்த 1 ஆம் திகதி தருவைகுளத்தில் இருந்து மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

கடந்த 23 ஆம் திகதி மாலைதீவு அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக மாலைதீவு கடல் பகுதிக்குள் படகு சென்று விட்டன என்று கூறப்படுகிறது.

அப்போது, அங்கு ரோந்து வந்த மாலைதீவு கடற்படையினர், 12 மீனவர்களையும் கைது செய்து, மாலி துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இதுகுறித்து தகவலறிந்த மீனவர்களின் உறவினர்கள், கனிமொழி எம்.பி., அமைச்சர் கீதாஜீவன் மற்றும் மாவட்ட நிர்வாகத்தை தொடர்பு கொண்டு, 12 மீனவர்களையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

# ஆளுநர் வேலையை மட்டும் பார்த்திருந்தால் குண்டுவீச்சு நடந்திருக்காது: சீமான்

தமிழக ஆளுநர் தனது வேலையை மட்டும் பார்த்திருந்தால், பெட்ரோல் குண்டு வீச்சு போன்ற பிரச்சினை வந்திருக்காது என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

மருதுசகோதரர்கள் குரு பூஜையை யொட்டி காளையார் கோவிலில் உள்ள அவரது நினைவிடத்தில் சீமான் மரியாதை செலுத்தினார். இதன்பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஆளுநர் மாளிகையில் பெட்ரோல் குண்டு வீசியதற்கெல்லாம் ஆட்சியை கலைக்க வாய்ப்பு இல்லை. குண்டு எறிந்தவனுக்கும், தி.மு.கவுக்கும் தொடர்பு இல்லை. ஆளுநர் அரசியல், அவதூறு பேசியதால் வெறுப்பாகிப் போனவர் குண்டு வீசியிருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

# ஐ.நா. தீர்மானத்தை நிராகரித்தது இஸ்ரேல்!



போர் நிறுத்தம் கோரி ஐ.நா. பொதுச் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை நிராகரிக்கிறோம் என இஸ்ரேல் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் போரை நிறுத்தக் கோரி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஜோர்தான் அரசு தீர்மானம் கொண்டுவந்தது.

இந்த தீர்மானத்துக்கு 120 நாடுகள் ஆதரவும், 14 நாடுகள் எதிர்ப்பும் தெரிவித்தன.

ஐ.நா. பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இஸ்ரேல் நிராகரிக்கிறது என அதன் வெளிவிவகார அமைச்சர் எலி கோஹென் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், போர் நிறுத்தம் கோரி ஐ.நா. பொதுச் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இஸ்ரேல் திட்டவட்டமாக நிராகரிக்கிறது.

ஹமாஸ் ஒரு பயங்கரவாத அமைப்பு. நாஜிக்கள், ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் எவ்வாறு அழிக்கப்பட்டார்களோ அவ்வாறே ஹமாஸ் பயங்கரவாதிகளும் அழிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்த தீர்மானத்தின் மீது பேசிய இஸ்ரேலுக்கான ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதி கிலாட் எர்டன்,

உண்மையின் அடிப்படையில் இந்த தீர்மானத்திற்கு எந்த மதிப்பும் இல்லை. இஸ்ரேல் சட்டத்தை மதிக்கும் ஒரு நாடு. தனது குடிமக்களை பாதுகாக்கப் போராடும் இஸ்ரேலை ஆதரிப்பதைவிட, சட்டத்தை மதிக்காத பயங்கரவாதிகளுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதாக பெரும்பாலான நாடுகள் கருதுகின்றன என்பது இந்த வாக்கெடுப்பில் வெளிப்பட்டுள்ளது.

வன்முறையைத் தடுக்க விரும்பும் எவரும் பயங்கரவாதிகளைப் பாதுகாக்கும் தீர்மானங்களுக்கு வாக்களிக்கக் கூடாது. உண்மையாக அமைதி திரும்ப வேண்டும் என விரும்பினால், ஆயுதங்களைக் கீழே போடவும், பிணையக் கைதிகளை உடனடியாக விடுவிக்கவும் ஹமாசை வலியுறுத்த வேண்டும். இது நடந்தால், போர் உடனடியாக முடிவுக்கு வரும். இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இந்த நாள் ஐ.நா.வுக்கும், மக்களுக்கும் ஒரு இருண்ட நாள்.

தன்னைத் தற்காத்துக்கொள்ள இஸ்ரேல் தொடர்ந்து போராடும். தனது எதிர்காலத்தைப் பாதுகாக்கவும், தக்கவைத்துக்கொள்ளவும் யூதர்களுக்கு உரிமை உண்டு. ஐ.நா. பொதுச் சபையில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தில் ஹமாஸ் பற்றி குறிப்பிடப்படவில்லை. ஹமாசின் அராஜகம் மீண்டும் நிகழாமல் தடுக்கப்பட வேண்டும்.

ஹமாஸ் பயங்கரவாத அமைப்பின் சக்தியை அழித்தொழிப்பதே இதற்கு ஒரே வழி. அப்பாவி மக்களை கொலை செய்யும் பயங்கரவாதிகளின் பெயரைக் குறிப்பிட வேண்டிய கடமை இந்த அவைக்கு இருக்கிறது. அவர்களின் பெயரை மறைப்பது சரியல்ல.

கொலைகாரர்களை பாதுகாக்க ஏன் நினைக்கிறீர்கள்? குழந்தைகளின் தலையை வெட்டி எறிந்த, அவர்களைக் கடத்திச் சென்ற பயங்கரவாதிகளை ஏன் பாதுகாக்கிறீர்கள்? இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது? இந்த தீர்மானம் என்ன சொல்கிறது என்பதை உங்களுக்கு நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். இது தீர்வுக்கு வழிகாண்கிறதா அல்லது இஸ்ரேலின் கைகளைக் கட்டிப் போட நினைக்கிறதா? வாய்ப்பு வழங்கப்பட்டால் ஹமாஸ்/ம் ஹிஸ்புல்லாவும் ஒரு ஒக்டோபர் 7ஐ மீண்டும் மீண்டும் நடத்துவார்கள். ஹமாஸின் வேர்களை வெட்டி எறிவதே இந்த பிரச்சினைக்கு ஒரே தீர்வு என்று தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் 22 பேர் சுட்டுக் கொலை: சந்தேக நபர் சடலமாக மீட்கப்பட்டார்!

அமெரிக்காவின் மைனே மாகாணத்தில் துப்பாக்குச்சூடு நடத்திய ரொபர்ட் கார்டு என்ற சந்தேக நபர் சடல மாக மீட்கப்பட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு லீவிஸ்டன் நகரில் உணவகம் மற்றும் கேளிக்கை விடுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 22 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த சிலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, துப்பாக்கிச்சூடு நடந்த இடங்களை சுற்றிவளைத்த பாதுகாப்பு அதிகாரிகள் அங்கு சி.சி.டி.வியில் பதிவான காட்சிகளைக் கொண்டு விசாரணையைத் தொடங்கினர். இதில், இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் 40 வயதான ரொபர்ட் கார்டு என்பது அடையாளம் காணப்பட்டது.

சந்தேக நபராக அறிவிக்கப்பட்ட அவர் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டன. அப்போது, குடும்ப வன்முறைக்காக சில மாதங்களுக்கு முன்பு அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என தெரியவந்தது. மேலும் அவர் மனநல மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுள்ளார் என்பதும் தெரியவந்தது. முன்னாள் இராணுவ வீரரான ரொபர்ட் கார்டு, துப்பாக்கி சுடுதல் பயிற்சியாளர் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவின் மைனே மாகாணத்தில் துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபரான ரொபர்ட் கார்டு (வயது 40) சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

லூயிஸ்டனில் இருந்து 10 மைல் தொலைவில் உள்ள லிஸ்பன் நீர்வீழ்ச்சி பகுதியில் உள்ள ஆண்ட்ரோஸ்கோகின் ஆற்றின் அருகே அவரது உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மைனே துப்பாக்கிச்சூடு சம்பவத்துக்கு பின்னர் தன்னைத் தானே அவர் சுட்டு இறந்துள்ளார் என தகவல் வெளியாகியிருக்கிறது.



# மட்டு. பாடசாலைக்குள் நுழைந்து மாணவனைத் தாக்கியவர் கைது!

மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல ஆண்கள் பாடசாலை ஒன்றுக்குள் தந்தையார் ஒருவர் உள்நுழைந்து, தனது மகனை தாக்கிய இரு மாணவர்களுக்கு பதிலாக வேறொரு மாணவனை தாக்கியதில், அந்த மாணவன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக நீதிமன்றில் கடமையாற்றிவரும் உத்தியோகத்தர் ஒருவரை நேற்று சனிக்கிழமை தாங்கள் கைது செய்துள்ளனர் என மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பாடசாலையில் தரம் 9இல் கல்வி கற்று வரும் மாணவன் ஒருவரை சக மாணவர்கள் இருவர் தாக்கினர் எனப் பாதிக்கப்பட்ட மாணவன் தனது பெற்றோரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அதனையடுத்து, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தையாரான நீதிமன்ற ஊழியர் பாடசாலைக்குள் நுழைந்து, தனது மகனை தாக்கிய இரு மாணவர்களுக்குப் பதிலாக வேறொரு மாணவனை தாக்கியுள்ளார்.

அதில் காயமடைந்த மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவரின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து இடம்பெற்ற விசாரணையின் அடிப்படையில் நீதிமன்றில் கடமையாற்றிவரும் நபர் சந்தேகத்தின் பேரில் நேற்று கைது செய்யப்பட்டார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலையப் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம் மத்துகமவில் இரு பிக்குகள் கைது!



மத்துகம பிரதேசத்தில் 13 வயதுச் சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் இரண்டு பிக்குகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான பிக்குகள் மத்துகம நவுத்துடுவ யட்டதொல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்த இருவர் மீதும் கிடைக்கப்பட்ட முறைப்பாட்டின் பேரில் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் பெண் தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஹேமமாலி சந்தேக நபர்களை கைது செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவன் மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளான்.

இந்நிலையில், பிக்குகள் இருவரும் மத்துகம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துடன் இணைந்து மத்துகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை 24 ஆக உயர்வு



நாடளாவிய ரீதியில் டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில், எதிர்வரும் காலத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படலாம் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் நளின் ஆரியரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இது சிறந்த நிலைமையொன்று அல்ல எனவும் இதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

டெங்கு பரவல் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமைகளில் சுற்றுச்சூழலை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் மீள முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

# கால அட்டவணைக்கு அமைய பயிர்ச்செய்கையை மேற்கொள்ளாத விவசாயிகளுக்கு நட்டஈடு இல்லை

## விவசாய அமைச்சர் அறிவிப்பு



உரிய கால அட்டவணைக்கு அமைய பயிர்ச்செய்கையை மேற்கொள்ளாத விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப் படமாட்டாது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பெரும்போகத்தில் உரிய கால அட்டவணைக்கு அமைய பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண் டும் என விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு மேற்கொள்ளப்படாத பட்சத்தில், எதிர்வரும் சிறுபோகத்திலும் நீர்ப்பற்றாக்குறைக்கு முகங்கொடுக்க நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த போகத்தில் நீரை மிச்சப்படுத்திக் கொள்ளாவிட்டால், எதிர்வரும் போகத் தில் சிக்கலை எதிர்நோக்க வேண்டி யேற்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது என்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நீரைச் சேமித்து விவசாயத்தை மேற்கொள்வது தொடர்பில் அவசிய-மான ஆலோசனைகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# வருகிறது 'சொத்து வரி'!

2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் முன்மொழிவில், சொத்து வரி அல்லது பரம்பரை வரி மீதான சொத்து வரியை கொண்டு வர அரசாங்கம் தயாராகி வருகிறது.

ஒருவருக்குச் சொந்தமான சொத்துகளின் அளவை மதிப்பீடு செய்து, அதற்கேற்ப வரி விதிப்பதே இந்தப் புதிய வரியின் நோக்கமாகும்.

இந்த வரியில் சொத்துகள், வங்கி வைப்பு, அசையா சொத்து, காப்பீடு, ஓய்வூதியம், வணிக உரிமை மற்றும் நிதிப் பத்திரங்கள் உள்ளிட்ட தனிப்பட்ட சொத்துகளின் முழு மதிப்பும் அடங்கும்.

தற்போது அரசாங்கத்தின் வரி வருமானம் குறைவடைந் துள்ளதால் இந்த வரியை எதிர்வரும் வருடம் முதல் நடை முறைப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட் டுள்ளது.

எவ்வாறாயினும், வீடு, வாகனம், சிறிய காணி போன்ற அடிப்படை சொத்துக்களை தவிர்த்து ஒருவர் சம்பாதித்த பிற கூடுதல் சொத்துக்களுக்கு இந்த வரிகளை விதிக்க முன்மொழியப்பட்டுள்ளது.



# ஐ.நா. நம்பிக்கை நிதிய சபைக்கு அம்பிகா சத்குணநாதன் நியமனம்

இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகா சற்குணநாதன், சித்திரவதைக்கு ஆளானவர்களுக்கான ஐ.நா. நம்பிக்கை நிதியத்தின் அறங்காவலர் சபைக்கு ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸினால் நியமிக் கப்பட்டுள்ளார்.

சற்குணநாதன் இருபது வருடங்களுக்கும் மேலாக மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சமூகங்களுடன், குறிப்பாக மோதலால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கில் மக்களுக்காகப் பணியாற்றியுள்ளார். அவர்களுக்கு தீர்வுகளை அணுக உதவினார்.

அவர் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் (2015-2020) ஆணையராகவும் பணியாற்றியவர்.

நாட்டின் முதல் விரிவான சிறைச்சாலை ஆய்வுக்கு தலைமை தாங்கியவர் அவர். அதற்கு முன் எட்டு வருடங்கள் அவர் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவல கத்தின் சட்ட ஆலோசகராகவும் இருந்தார்.

# சுமண தேரருக்கு எதிராகப் புகார் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில்!

## தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவர் வெள்ளியன்று செய்தார்



(கனகராசா சரவணன்)

இனங்களுக்கிடையே இன முறுகலை ஏற்படுத்தும் விதமாக வீதியில் நின்று வன்முறையாகச் செயற்பட்டு தமிழர்களின் தலைகளை வெட்டப் போகிறார் என ஊடகங்கள் ஊடாக அச்சுறுத்தல் விடுத்த மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரட்ன தேரருக்கு எதிராக தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை செய்துள்ளார்.

சுமண தேரர் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு ஜெயந்திபுர விகாரைக்கு அருகாமையில் வீதியை மறித்து வீதியால் சத்தமாக தென்னிலங்கையில் உள்ள தமிழர்கள் ஒவ்வொருவரினதும் தலைலையை வெட்டி அனுப்பப் போகிறார் என அச்சுறுத்தல் விடுத்தமையுடன் தமிழர்களை மிக வேதனைப்படுத்தும் அளவிற்கு தூஷணவார்த்தைகளைப் பிரயோகித்து சத்தமிட்டுள்ளார்.

தமிழ் - சிங்கள மக்களிடையே ஒரு பெரும் இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் முகமாக கருத்துக்களை தெரிவித்துள்ளமை ஊடகங்கள் ஊடாக வெளிவந்துள்ளது. தேரர் இவ்வாறான இன முரண்பாட்டைத் தோற்றுவிக்க முயற்சித்தமையுடன் தமிழ் மக்களின் உயிருக்கும் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

அத்துடன் இந்த தேரர் இந்த மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக தமிழ் மக்களின் பூர்வீக இடங்களில் அத்துமீறி புத்தர் சிலையை வைப்பது, தமிழர்களை அச்சுறுத்துவது போன்ற பல்வேறு விதமாக இன முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றார்.

எனவே இவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்குதல் செய்து, இவரை கைது செய்ய வேண்டும். இவரைப் போன்ற இனவாத முரண்பாட்டைத் தோற்றுவிப்பவர்களுக்கு அது ஒரு பாடமாக அமைய வேண்டும். நீதியையும் சட்டத்தையும் நிலைநாட்ட வேண்டும்.

- இவ்வாறு கோரி தேரருக்கு எதிராக தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# சுமண தேரருக்கு மிக அவசரமாக மனநோய் வைத்தியம் அவசியம்!

## சித்தார்த்தன் எம்.பி. கூறுகின்றார்





-எஸ்.நிதர்ஷன்-

தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்ற அம்பிட்டிய சுமண தேரரின் செயற்பாடுகள் ஆபத்தானவை என நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அடாவடியில் ஈடுபடுகின்றமையைப் பார்க்கும் போது அவருக்கு மனநோய் ஏற்பட்டிருப்பது போன்று உள்ளது. அவருக்கு உரிய சிகிச்சை வழங்கப்படுவதுடன் அவருக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சித்தார்த்தன் வலியுறுத்தியுள்ளார்.

சுமணதேரர் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே சித்தார்த்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்தி இன ஐக்கியத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளை அவர் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றார்.

தமிழ் மக்கள் தங்கள் உரிமையை கோரிப் போராடுகிற போது அடாவடித் தனங்களில் ஈடுபடுவதுடன் கொலை மிரட்டல் விடுகின்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுவது மி மிக ஆபத்தானது.

இந்தச் செயற்பாடுகள் தொடர்வது இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் குலைத்து விரிசல்களையும் மோதல்களையுமே ஏற்படுத்தி அழிவையே தரும்.

அவருடைய கதைகள், பேச்சுக்கள், செயற்பாடுகளைப் பார்த்தால் அவருக்கு மனநோய் இருப்பது போல் தான் தெரிகிறது. அதன் பெளிப்பாடாகவே அவரது செயற்பாடுகளும் அமைகின்றன.

இதனால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பலரும் கோருகின்றனர். என்னைப் பொறுத்தவரையில் இவ்வாறன நோயாளிகளுக்கு எதிராக காலம் தாழ்த்தாது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் சிகிச்சை வழங்குவதும் அவசியம்.

சிங்கள - பௌத்த இனவாதத் தீவிரப் போக்கைக் கடைப்பிடிக்கும் இவர் போன்ற ஏனையவர்களும் பலர் உள்ளனர். அதே நேரத்தில் அரசாங்கமும் திட்டமிட்ட ரீதியில் இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுக்கிறது.

இவ்வாறு இனவாதம் தொடர்ந்து பல வடிவங்களில் கட்டவிழ்த்து விடுவது இன ஐக்கியத்திற்கு மிகவும் ஆபத்தானது என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். - எனவும் வலியுறுத்தியுள்ளார்.

## இஸ்ரேலில் மோதலில் உயிரிழப்பு:

# இலங்கைப் பெண்ணின் உடலம் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது





இஸ்ரேலில் உயிரிழந்த இலங்கைப் பெண் அனுலா ரத்நாயக்கவின் உடல் நேற்று முற்பகல் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

டுபாய் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தின் மூலம் அவரது உடல் கொண்டுவரப்பட்டுள்ளது.

அவரது உடலை பொறுப்பேற்பதற்காக அவரது உறவினர்களும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகள் சிலரும் விமான நிலையத்திற்குச் சென்றிருந்தனர்.

இஸ்ரேலின் மீது ஹமாஸ் கிளர்ச்சியாளர்களினால் கடந்த 07 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் அனுலா ரத்நாயக்க காணாமற்போயிருந்தார்.

பின்னர் மோதல்களின் போது அவர் உயிரிழந்துள்ளார் என அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு அறிவித்திருந்தது.

இதனையடுத்து, உயிரிழந்த அனுலா ஜெயதிலகவின் சடலத்தை அடையாளம் காண மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

உரிய பணிகள் நிறைவடைந்தவுடன் உயிரிழந்தவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு உடல் அனுப்பி வைக்கப்படும் என இலங்கைக்கான இஸ்ரேலிய தூதரகம் தெரிவித்திருந்ததையடுத்து நேற்று உடல் நாட்டை வந்தடைந்தது.

அனுலா ரத்நாயக்க, இஸ்ரேலில் 10 வருடங்களாக பணிபுரிந்திருந்தார்.

களனி - ஈரியவெட்டிய பகுதியை சேர்ந்த 49 வயதான அவர், இரண்டு பிள்ளைகளின் தாயாவார்.




## சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் முயற்சியாக

# பருத்தித்துறையில் இருந்து டிக்வெல்ல வரையான சைக்கிள் ஓட்டம் சக்கோட்டை முனையில் ஆரம்பம்

இலங்கையில் சுற்றுலாத்துறை மேம்படுத்தும் முயற்சியாக - சர்வதேச சுற்றுலாவிகளை ஈர்க்கும் வகையில் - பருத்தித்துறைமுதல்டிக்வெல்லவரையில் சைக்கிள் பயணம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.00 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

24 மணித்தியாலங்களில் சுமார் 600 கிலோ மீட்டர் தூரத்தை சைக்கிள் பயணமாக கடக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள இந்த சைக்கிள் பயணத்தில் சர்வதேச சைக்கிள் ஓட்ட வீரர்கள் உள்ளிட்ட 65 சைக்கிள் ஓட்ட வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

வடமராட்சி - பருத்தித்துறை, சக்கோட்டை முனைப் பகுதியில் இருந்து நேற்று முந்தினம் நள்ளிரவு 12.00 மணிக்கு ஆரம்பித்து முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த விழிப்புணர்வு சைக்கிள் பயணம் மாத்தறை மாவட்டம் - டிக்வெல்ல முனையைநேற்றுநள்ளிரவு12.00மணிக்கு (இன்று நாள் பிறக்கும் சமயததில்) சென்றடையும் வகையில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா - ஹொரவப்பொத்தனை வீதியில் இறந்த நிலையில் கிடந்த காட்டு யானை!





வவுனியா – ஹொரவப்பொத்தானை வீதியில் இறந்த நிலையில் யானை ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

ஹொரவப்பொத்தானை காட்டுப் பகுதியில் இருந்து வீதி நோக்கி வந்த யானையே வீதி ஓரத்தில் இறந்துள்ளது. வீதியால் சென்றவர்கள் இந்த யானை இறந்து இருப்பதை அவதானித்ததை யடுத்து பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து யானை இறந்தமைக்கான காரணம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 288 கிலோ பீடி இலைகள் கற்பிட்டியில் பிடிபட்டன!





(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி – கீரிமுந்தல் கடற்பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து 288 கிலோ கிராம் பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கடற்படையினரும், கற்பிட்டி பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பீடி இலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கீரிமுந்தல் கடற்பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இவ்வாறு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பீடி இலைகள் அடங்கிய மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன எனக் கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அந்த வீட்டில் 9 உரப் பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 288 கிலோ கிராம் நிறையுள்ள பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பீடி இலைகள், இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டு, இலங்கையின் பல இடங்களுக்கும் விநியோகிக்கும் நோக்கில் இவ்வாறு வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிக்கின்றனர் எனக் கடற்படையினர் கூறியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 48 வயதுடையவர் எனவும் இவர் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர், கைப்பற்றப்பட்ட பீடி இலைகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனக் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.10.2023




இன்றைய நாள் மிகவும் பரபரப்பாக இருக்கும். ஆனால் நீங்கள் ஆறுதலாக இருங்கள்.

இன்று நீங்கள் ஓய்வெடுக்க இயலாத அளவிற்கு வேலை இருக்கும். அதன் காரணமாக நீங்கள் சில அசௌகரியங்களை உணர்வீர்கள்.

குடும்பத்தில் சில குழப்பங்கள் காணப்படும். நீங்கள் அனுசரித்துப் போக வேண்டியது அவசியம்.

அதிகரிக்கும் செலவினங்களினால் கவலைகள் உண்டாகும். தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்தவும்.

ஆரோக்கியம் சற்று கவலை அளிப்பதாக இருக்கும். நீங்கள் களைப்புடன் காணப்படுவீர்கள்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். உங்கள் செயல்களில் சிறிது கவனமாக இருக்க வேண்டும். உற்சாகமாக இருப்பீர்கள் என்றாலும் திட்டமிடல் அவசியம்.

இன்றைய வேலைகள் மிகவும் கடினமாக இருக்கும். நீங்கள் பொறுமை இழக்க நேரிடலாம். உங்கள் திறமை கேள்விக்குறியாக அமையலாம்.

உங்களின் சுயநலப் போக்கு காரணமாக தம்பதிகளுக்கிடையேயான உறவு பாதிக்கும். எதிலும் யதார்த்தமாக இருப்பது நல்லது.

இன்று நிதிநிலைமை சீராக இல்லை. கூடுதல் செலவினங்கள் நேரலாம்.

இன்று கால் வலி மற்றும் தலைவலி போன்ற உபாதைகளால் நீங்கள் பாதிக்கப்படலாம். குளுமையான உணவுகளைத் தவிர்க்கவும்.




சிறந்த திட்டமிடலின்மை காரணமாக அவநம்பிக்கை உணர்வு எழும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் உங்கள் சக பணியாளர்களுடன் பிரச்சினைகள் ஏற்படலாம். பொறுமையுடன் இருந்து கடமையைச் செய்யுங்கள்.

உங்கள் எண்ணங்களை சரியாக பரிமாறிக் கொள்ளாததன் காரணமாக கணவன் மனைவி உறவில் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படுகின்றது. உங்கள் செலவுகளை சமாளிக்க கடன் வாங்க நேரிடலாம்.

மன அழுத்தத்தின காரணமாக உங்கள் உடல் பகுதிகளில் உபாதைகள் ஏற்படலாம்.




இன்று முற்போக்கான வளர்ச்சி ஏற்படும் நாள். முக்கியமான முடிவுகளை நீங்கள் எடுக்கலாம். அது உங்களுக்கு நல்ல பலன்களைத் தரும்.

பணியில் இன்று உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். கடினமான பணிகளிலும் உங்கள் திறமை பளிச்சிடும்.

இன்று உங்கள் வாழ்க்கைத்துணையார் மகிழ்ச்சியுடன் காணப்படுவார். இன்று உங்கள்நண்பருடைய வீட்டு விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சீராக உள்ளது. எதிர்காலத்திற்கு பயன் தரும் வகையில் இன்று சேமிப்பீர்கள்.

இன்று நீங்கள் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் காணப்படுவீர்கள் என்பதனால் ஆரோக்கியம் மிகச் சிறந்த முறையில் இருக்கும்.




கோவில் திருவிழாக்கள் அல்லது ஆன்மிகக் காரியங்கள் இன்று உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று உங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள். இன்று ஓய்வில்லாமல் பணியாற்றுவீர்கள். சிறந்த முறையில் திட்டமிட்டு பணிகளைச் செவ்வனே முடிப்பீர்கள்.

இன்று நகைச்சுவை உணர்வுடன் காணப்படுவீர்கள். உங்கள் துணையின் உணர்வுகளை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று நிதி ஆதாயமான நாள். உங்கள் தேவைக்காக கடன் வாங்குவது பயனளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து விளங்கும். ஆரோக்கியத்தில் எந்தவித குறைபாடும் இருக்காது.




வாழ்க்கையின் சாரம் பற்றி இன்று நீங்கள் கற்பீர்கள். இறைவழிபாடு மற்றும் ஆன்மிக காரியங்களில் ஈடுபடுவதன்மூலம் உங்கள் கவலைகளை மறக்கலாம்.

இன்று வேலைகள் அதிகமாக காணப்படும். அதை சரியான முறையில் முடிக்க உங்கள் பணிகளை சரியாக அட்டவணையிட்டு செயலாற்றுங்கள்.

உங்களின் சுயநலப் போக்கு காரணமாக தம்பதிகளுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

இன்று செலவுகள் காணப்படுகின்றது. செலவுகளை சமாளிக்க சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

இன்று கண்களில் எரிச்சல் காணப்படலாம்.




இன்று உற்சாகம் குறைந்து காணப்படும். அதன் காரணமாக உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும்.

இன்று பணிச்சுமை காரணமாக பணியின் பொழுது பொறுமையின்றி காணப்படுவீர்கள். அதனால் அதிருப்தியுடன் காணப்படுவீர்கள்.

இன்று உங்களிடம் கசப்பான உணர்வுகள் காணப்படலாம். உங்கள் நடத்தையில் அது வெளிப்படும். வாழ்க்கைத் துணையாருடன் நட்பான முறையில் அனுக முயலங்கள்.

இன்று செலவுகளை கட்டுப்படுத்துவது கடினம். உங்கள் கைமீறிப் போகின்ற செலவுகள் காரணமாக சிறிது பணமே கையில் தங்கும்.

இன்று தலைவலி மற்றும் சளி போன்ற உபாதைகளால் கவலை ஏற்படும்.




இன்று சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். உங்களது சிறந்த அனுகுமுறைமூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். இன்று வெளிப்படையாகப் பேசுவீர்கள்.

கடினமான பணிகளையும் இன்று எளிதில் முடிப்பீர்கள். திருப்தியும் அடைவீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்

நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். ஒருவருக்கொருவர் சரியாக உருவாகியது போல் உணர்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். அதிக நேர உழைப்பிற்கான ஊக்கத்தொகை உங்களது பணவரவை அதிகரிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.10.2023

## தனுசு

இன்று ஆன்மீக காரியங்களில் ஈடுபடுவதன் மூலம் வெற்றிகரமான பலன்களைக் காண்பீர்கள். அதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்குவீர்கள். உங்கள் வாழ்க்கை தரத்ததை உயர்த்துவீர்கள்.

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே வேலைகளை முடித்து உங்கள் திறமையை நிரூபிப்பீர்கள். மேலதிகாரியின் பாராட்டுகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணையுடன் உண்மையான அனுகுமுறையைக் கையாள்வீர்கள். அவரும் உங்களை நல்ல முறையில் புரிந்து கொள்வார்.

நிதிநிலைமை இன்று சீராக உள்ளது. இன்று பணத்தை சேமிப்பீர்கள்.

## கும்பம்

இன்று நீங்கள் எதிர்பார்த்த பலனகளைப் பெறுவீர்கள். உள்ளதைக் கொண்டு வளமோடு இருப்பீர்கள். உங்கள் இனிமையான பேச்சால் பிறரை திருப்தியடையச் செய்வீர்கள்.

திறமையுடன் செயலாற்றுவது இன்று சற்று கடினமாக இருக்கும். பணியில் அதிக கவனத்தை செலுத்த வேண்டும்

நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் உணர்ச்சிபூர்வமாக நடந்து கொள்வீர்கள்.

செலவுகள் அதிகமாக காணப்படுவதன் காரணமாக பணத்தை நிர்வகிப்பது கடினமாக இருக்கும்.

தாயின் உடல் நிலை குறித்து செலவுகள் செய்ய நேரிடலாம்.

## மகரம்

இன்று நீங்கள் சில ஏமாற்றங்களை சந்திக்க வாய்ப்பு உள்ளது. எனவே உங்கள் செயல்களை திட்டமிட்டு அதன் படி செயலாற்றுங்கள்.

இன்று தன்னம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். பணிகளை மெதுவாகச் செய்வீர்கள். வேலை செய்யும் முறையை முன் கூட்டியே திட்டமிடுவது நல்லது.

நீங்கள் களைப்பாக காணப்படுவீர்கள். அது உங்கள் நடத்தையில் வெளிப்படும் அது நல்லுறவை பாதிக்கும்

இன்று அதிக செலவுகள் காணப்படும். அதற்காக நீங்கள் கடன் வாங்க நேரிடலாம்.

காய்ச்சல் அல்லது சளி போன்ற உபாதைகளால் பாதிக்கப்படலாம். குளுமையான பதார்த்தங்களை தவிரத்து விடுங்கள்.

## மீனம்

இன்று உங்கள் திறமைகளை நன்கு புரிந்து கொள்வீர்கள் உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு உங்கள் லட்சியங்களை அமைத்துக் கொள்வீர்கள்.

சிறந்த முறையில் பணியாற்றி மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். கடினமான பணிகளையும் இன்று எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நல்ல உணர்வுகளைப் பகிரந்து கொள்வீர்கள். அதனால் மகிழ்ச்சி உண்டாகும்

நிதிநிலைமை சீராக இருக்கும். இன்று உங்களால் கணிசமாக சேமிக்க இயலும்.

உங்களின் தன்னம்பிக்கை இன்று உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.








## தர்மசாலாவில் பரபரப்பு

# நியூஸிலாந்தை வீழ்த்தியது ஆஸி

### மற்றொரு ஆட்டத்தில் பங்களாதேஷை பந்தாடியது நெதர்லாந்து

தர்மசாலாவில் நேற்று நடைபெற்ற பரபரப்பான லீக் ஆட்டமொன்றில் அவுஸ்திரேலிய அணி, நியூஸிலாந்தை வீழ்த்தியது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று தர்மசாலாவில் நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் அவுஸ்திரேலியா – நியூஸிலாந்து அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய அஸ்திரேலியா சார்பாக, தொடக்க வீரர்களாக வோர்னர் மற்றும் ஹெட் ஆகியோர் களமிறங்கினர். இருவரும் தொடக்கம் முதலே நியூஸிலாந்தின் பந்துவீச்சை அடித்து துவம்சம் செய்தனர்.

சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட வோர்னர், அணியின் ஓட்ட எண்ணிக்கை 175 ஆக உயர்ந்தபோது 81 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ஹெட் சதம் அடித்த நிலையில் (109) ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய மார்ஷ் (36), ஸ்மித் (18), லபுஸ்சாக்னே (18) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். பின்னர் க்ளென் மக்ஸ்வெல் மற்றும் ஜோஷ் இங்க்லிஸ் ஜோடி சேர்ந்தனர்.

மக்ஸ்வெல் அதிரடியாக ஆடி 41 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் அவுஸ்திரேலியா 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 388 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 389 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கியது நியூஸிலாந்து.

அந்த அணியின் தொடக்க வீரர்களாக டெவோன் கான்வே (28) மற்றும் வில் யங் (32) களமிறங்கினர். இந்த ஜோடி அணிக்கு சிறப்பான தொடக்கத்தைக் கொடுத்தது.

தொடர்ந்து ரச்சின் ரவீந்திரா– டேரில் மிட்சேல் இருவரும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இந்த ஜோடி 3ஆவது விக்கெட்டுக்காக 96 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் பிரிந்தது. டேரில் மிட்சேல் அரைச்சதம் அடித்து (54) ஆட்டமிழந்தார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் விழுந்து கொண்டே இருந்தாலும், மறுபுறம் தனது அதிரடி ஆட்டத்தைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்த ரச்சின் ரவீந்திரா, சதம் அடித்து அசத்தினார். அவர் 89 பந்துகளில் 9 பௌண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் 116 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

பின்னர் அணித்தலைவர் டொம் லேதம் (21), கிளென் பிலிப்ஸ் (12) ஆகியோர் ஆட்டமிழந்தனர்.

எனினும், நீஷம் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் ஆட்டம் பரபரப்பானது. அதிரடி ஆட்டத்தால் அரைச் சதம் அடித்த நீஷம், அணியை வெற்றி இலக்குக்கு அருகில் கொண்டுசென்றார். எனினும், அவரால் அணியை வெற்றி பெறச்செய்ய முடியவில்லை. கடைசி ஓவரில் அவர் 'ரன் அவுட்' ஆனார்.

இறுதியில் நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 383 ஓட்டங்களையே சேர்த்தது.

இதனால், பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்தை வீழ்த்தி வெற்றிபெற்றது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில், அடம் ஜாம்பா அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனான அவுஸ்திரேலியாவின் ஹெட் தெரிவானார்.

இதேவேளை நடைபெற்ற மற்றொரு உலகக் கிண்ண லீக் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி நெதர்லாந்து அணி அபார வெற்றி பெற்றது.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | தென்னாபிரிக்கா | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | 2.032 |
| 02 | இந்தியா | 5 | 5 | 0 | 0 | 0 | 10 | 1.353 |
| 03 | நியூஸிலாந்து | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | 1.232 |
| 04 | அவுஸ்திரேலியா | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | 0.970 |
| 05 | இலங்கை | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.205 |
| 06 | பாகிஸ்தான் | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -0.387 |
| 07 | ஆப்கானிஸ்தான் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.969 |
| 08 | நெதர்லாந்து | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -1.277 |
| 09 | பங்களாதேஷ் | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.338 |
| 10 | இங்கிலாந்து | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -1.634 |